மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# திருவண்ணாமலை கிரி (மலை) வலம்

கதி.முருகேசன் (கதிர் முருகு)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி

சிவனுக்குரிய ஐம்பூதத் தலங்களுள் திருவண்ணாமலை அக்கினித் தலமாக விளங்குகிறது. இத்தலத்தில் உள்ள ஆயிரத்து அறுபத்தைந்து அடிகளை உடைய மலை சிவலிங்க வடிவமாக வழிபடப்பட்டு வலம் வந்து அருள் பெறும் தன்மையால் புகழ்பெற்று விளங்குகிறது. மாதந்தோறும் பௌர்ணமி நாளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு மலைவலம் வருவதைக் காண முடிகிறது. பௌர்ணமி நாட்கள் மட்டுமன்றிச் சாதாரண நாட்களிலும் விழாக்காலத்திலும் அமாவாசை தினங்களிலும் மலைவலம் வருவது வழக்கில் உள்ளது.

"சிவபெருமான் மலை வடிவமாக அமர்ந்து அருள் வழங்குமிடம் திருவண்ணாமலை. பதினான்கு கிலோமீட்டர் சுற்றளவு கொண்டது. சிவபெருமான் சிவலிங்கமாக எழுந்தருளியிருக்கும் திருமலையைச் சுற்றியுள்ள வீதி, விக்கிரம பாண்டியன் திருவீதி"[1] என்று அழைக்கப்படுகிறது "ஆங்காங்கே கோயில்களும் நந்திதேவர் மண்டபங்களும் மண்டகப்படி மண்டபங்களும் தவச்சாலைகளும் நிறைந்தபடியால் மலைவலம் வரும் வழி சாலை என்று பெயர் பெறாமல் திருவீதி எனப்பெயர் பெற்றது."[2] மலை வலப்பாதையில் பாண்டிய மன்னன் அமைத்த சாலைக் கற்கள் காணப்படுகின்றன.

"பதிமூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோப்பெருஞ்சிங்கரும் அவரது மகன் வேணாவுடையாரும் அண்ணாமலையாருக்குப் பல்வேறு வகையான திருப்பணிகளைக் கோயிலுக்கு உள்ளேயும் வெளியேயும் செய்தனர்".[3] மலை வலம் வரும் வழியில் உள்ள சிறுமண்டபங்களும் குளங்களும் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேணாவுடையானால் கட்டப்பெற்றிருத்தல் வேண்டும்."[4] வல்லாள மகாராசன், வச்சிராங்கத பாண்டியன் முதலான மன்னர்கள் அண்ணாமலையானை வழிபட்டும் மலைவலம் வந்து பல பேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். இவற்றை நோக்கும்போது திருவண்ணாமலை மலைவலம் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே சிறப்புற்றிருந்தது என்பது புலனாகிறது.

அண்ணாமலையார் ஆலயத்தின் முன்பு மலைவலம் தொடங்கிப் பதினான்கு கிலோமீட்டர்கள் சுற்றளவு உள்ள மலைப்பாதை நெடுகிலும் பல்வேறு வழிபாட்டிடங்களும் தீர்த்தக் குளங்களும் ஆசிரமங்களும் மண்டபங்களும் நிறைந்திருக்கின்றன. இவை மலைவலம் வரும் பக்தர்களுக்கு ஓய்விடங்களாகவும் வழிபாட்டுச் சிந்தனையை ஒருமுகப்படுத்திப் பக்திச் சிந்தனையுடன் மலை வலத்தை நிறைவு செய்வதற்குப் பக்கபலமாய் விளங்குகின்றன.

மாதந்தோறும் பௌர்ணமி நாளில் இரவில் திருவண்ணாமலையில் மலைவலம் நடைபெறுகிறது. மலையைப் பிரதட்சணம் வருவதென்பது அந்த மகேஸ்வரனையே சுற்றிவந்து வணங்குவதாகும்"[5] "கிரிப்பிரதட்சணத்தில் நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் அடியும் ஆயிரம் அசுவமேத யாகப் பலனைத் தரும்"[6]. "அருணாசலத்தை வலம் செய்வது பிறவியெனும் பெருங்கடலைக் கடப்பதற்கு ஒரு தோணி. ஏழுவகை நரகத்திலும் புகாமல் அருமையாய் முக்தியில் ஏறுவதற்கு ஏணியாகும். இதனைச் செய்வோர் சுவாமியை மனமுருக்கிச் சந்தோக்ஷமாக்குவர்"[7]. "காசி முதலாகிய பல தலங்களிலும் பரமேஸ்வரனைப் பலகாலம் பூசித்த பலனும் அநேக காலம் தவம் செய்த பலனும் பக்தியுடன் அருணாசலத்தை வலம் வர வேண்டும் என்று சொல்லிய பலனுக்கு ஈடாகாது"[8] "அருணாசலத்தை வலம் வரவேண்டும் என்று நினைத்து ஓர் அடி எடுத்து வைத்தவர்க்கு யாகம் செய்த பலன் சித்திக்கும். இரண்டு அடி வைத்தவர்க்கு இராசசூய பலன் சித்தியாகும். மனத்தூய்மையுடன் மூன்று அடி வைத்தவர்க்கு அசுவமேதம் செய்த பலன் உண்டாகும். நாலடி வைத்தவர்க்கு எல்லா யாகத்தின் பலனும் உண்டாகும்"[9] என்று தலத்தின் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

"மலைவலப் பாதையில் மூலிகை வாசனை, சந்தன வாசனை, சாம்பிராணி வாசனை, ஜவ்வாது வாசனை, விபூதி வாசனை, பலவகை மலர்களின் வாசனை இன்னும் இன்ன என்று அறிய இயலாத வாசனை காற்றில் கலந்திருப்பதை மலைவலம் வருபவர்கள் உணர இயலும். இவை பிணிகளைப் போக்குவதுடன் கர்மாவையும் போக்கிட உதவுபவை. இவை இடம் மற்றும் காலம் ஆகியவற்றிற்கேற்ப மாறுபடக்கூடும். இதனை மலைவலம் வருபவர்கள் உணரலாம். மலையை வலம் வருவதால் உடலில் செம்மை ஒளி படர்ந்திருக்கும்."[10] "பௌர்ணமி நிலவின் அதன் ஒளியில் மலைவலம் வரும் போது அதன் குளுமையான ஒளிக்கதிர்கள் உடலில் படுவதால் மனத்திற்கும் உடலுக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. பலவகை மூலிகைகள் மலைமேல் விளைந்திருப்பதால் மலைவலம் வரும்போது சுவாசிக்கும் காற்றில் கலந்து உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது. பொதுவாக மலைவலம் வரும்போது உடலில் எல்லா உறுப்புகளும் உடற்பயிற்சிபெற்று நல்ல முறையில் இயங்கவும் கவலைகளை மறந்து மனதை ஒருமுகப்படுத்தவும் இறைவனை மனதில் நினைத்து மனதைச் சுத்தப்படுத்தவும் ஒரு வழியாக இருக்கிறது."[11] "பௌர்ணமியன்று சந்திரபகவான் பதினாறு கலைகளுடன் பரிபூரணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அமிர்த கிரணங்களை ஒரு மனிதன் தன் உடலில் ஏற்றால் அவனுக்கு அற்புதமான மனோ சக்தியும் தபோ பலனும் தெய்வ பலனும் கிடைக்கும். அருணாசலேசுவரரே தன்னுடைய மேனியானது மலையின் மீது சந்திரனின் அமிர்தக் கதிர்கள் அனைத்தையும் பெற்று அதை ஒவ்வொரு மனிதனுடைய தேக சக்திக்கு ஏற்றவாறு அளிக்கிறார்."[12] "திருவண்ணாமலையில் விசேசமான கற்கள் மூலிகைகள் மரங்கள் உண்டு. இவை நோய்களையும் தோசங்களையும்

பாவங்களையும் நீக்கும் சக்தி பெற்றவை. சந்திர பகவானின் ஒளிக்கதிர்கள் பட்டுப் பிரதிபலிக்கும்போது அவற்றின் சக்தி பன்மடங்காகப் பெருகி மலைவலம் வருபவர்களின் உடலில் ஊடுருவிப் பாய்கிறது. இதற்காகவே பௌர்ணமியன்று மேல் சட்டை அணியாமல் சாதாரண வேட்டியை அணிந்து ஆண்கள் மலையை வலம்வர வேண்டும்."[13]

"திங்கட்கிழமை மலைவலம் வருபவர்கள் இந்திரன் போல ஏழு உலகத்தையும் ஆள்வார்கள்."[14] "செவ்வாய்கிழமை மலைவலம் செல்பவர்களின் கடனும் வறுமையும் நீங்கும்."[15] "புதன்கிழமை மலைவலம் வரின் கலைகளில் நிலைபெறுவார்கள். வியாழக்கிழமை வலம் வருபவர்கள் ஞானிகளுக்கு ஒப்பான நிலை பெறுவார்கள். வெள்ளிக்கிழமை வலம் வருபவர்கள் விசுஷ்ணுபாதம் அடைவர். சனிக்கிழமை வலம் வருபவர்கள் நவக்கிரகங்களைச் சுற்றிய பலனைப் பெறுவார்கள்"[16] என்றவாறாக மலைவலம் பற்றியும் புராண நூல்களிலும் தலவரலாற்று நூல்களிலும் பதிவுகள் காணப்படுகின்றன.

"மலைவலம் வருவோர் தூய நீரில் நீராடி திருவெண்ணீறு பூசிக்கொண்டு கால்களில் காலணி அணியாமல் திருவண்ணாமலைத் தலத்திற்குரிய பக்திப் பாடல்களைப் பாடியவாறு அல்லது அருணாசலேசுவரரைத் தியானித்துக் கொண்டு அல்லது ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிக்கொண்டு மலைவலம் வருதல் வேண்டும்."[17] "இவ்வாறு பக்தர்கள் மலைவலம் வரும் சமயங்களில் தேவர்களும் சித்தர்களும் மகான்களும் சூக்கும உருவில் மலையை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உயரிய எண்ணத்துடன் அவர்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாதவாறு செய்வது அவசியம்."[18] "மலை பிரதட்சணத்தை நடந்துதான் நிறைவேற்ற வேண்டும். எது எத்தனை மணிக்கணக்காயினும் அத்தனை நேரமும் ஈசனின் அண்மையில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது".[19] "தனித்து நடப்பதே உத்தமம் அது பல உன்னத அனுபவங்களுக்கு வழிவகுக்கும் மூலிகை அல்லது பூவின் அபூர்வ மணம் அற்புதமாக வீசும்."[20] என்றவாறு மலைவலம் வருவோர்க்குப் பல அறிவுரைகளும் ஆலோசனைகளும் வலம்வரும் முறைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

திருவண்ணாமலை மலைவலம் சமுதாய ஒற்றுமைக்கும் சகிப்புத்தன்மைக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைவதுடன் ஒருமுகப்பட்ட சிந்தனை மன ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கும் வழிகாட்டுகிறது. திருவண்ணாமலை மலைவலம் ஆன்மீக அனுபவமாக அமைவதுடன் சிறந்த மன அமைதி தருவதாக அமைந்து சிறக்கிறது.

**குறிப்புகள்**

1. சு. திருநாவுக்கரசு திருவண்ணாமலை ப.106
2. அ. பாண்டுரங்கனார் (தொ.ஆ) அருணாசலப்புராணம், ப.168
3. மேலது ப.175
4. மேலது ப. 176, 177
5. தேவநாத சுவாமிகள், ஞான ஒளிவீசும் திருவண்ணாமலையின் ஸ்தல வரலாறு ப. 20

6. மேது ப. 21
7. ஸ்ரீ அருணாசலேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 2002 ப.12
8. மேலது ப. 21
9. ரா.ய.சொ.(உ ஆ) அருணாச்சலப்புராணம் ப. 249
10. ஏன்.ஏ.சரவணகுமாரன், நினைத்தாலே முக்தி அருளும் திருவண்ணாமலை ப. 99
11. சு. திருநாவுக்கரசு திருவண்ணாமலை ப. 108
12. பாலசுப்பிரமணியன் சோதிமலை ப. 38
13. மேலது ப. 38
14. ராய.சொ.(உ.ஆ) அருணாச்சாலப்புராணம் ப.255
15. மேலது ப. 38
16. சு. திருநாவுக்கரசு திருவண்ணாமலை ப. 108
17. என்.ஏ.சரவணகுமாரன், நினைத்தாலே முக்தி அருளும் திருவண்ணாமலை ப. 97
18. மேலது. ப. 97
19. தேவநாத சுவாமிகள், ஞான ஒளிவீசும் திருவண்ணாமலையின் ஸ்தல வரலாறு ப. 20
20. மேலது . ப. 23